**இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.**

**O.S. No. 252/2021**

**Date :06.04.2026**

**வா.சா. 1 - ராஜபரந்தாமன்**

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**.

நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. வழக்குப் பட்டிகை சொத்து ரீ சர்வே எண் 1116/13 என்றால் சரிதான். எனது தகப்பனாரின் தந்தை சுப்பிரமணிய நாடார் என்பவரின் சொத்தில் தான் எனது பெரியப்பாவின் குழந்தைகள் ரீ சர்வே எண் 1116/4 ல் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா சுப்பிரமணிய நாடாருக்கு 3 குழந்தைகள் என்றால் சரிதான். வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள ஜினாலஜி அறிக்கையில் ஸ்ரீ கிருஷ்ண பெருமாள் நாடார், செல்லையா நாடார், லட்சுமணப் பெருமாள் நாடார் ஆகியோர்கள் எனது தாத்தா சுப்பிரமணிய நாடாரின் வாரிசுகள் என்றால் சரிதான். குடும்ப சொத்தை பாகம் வைக்கும் சமயத்தில் வாக்கால் பாகத்தின் படி ரீ சர்வே எண் 1116/4 ல் உள்ள 11 சென்ட்டை செல்லையா நாடாருக்கு கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

வழக்குரையுடன் தாக்கல் செய்துள்ள ஜினாலஜி அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மூத்த வாரிசான பிரதிவாதிகளின் தந்தையான ஸ்ரீ கிருஷ்ண பெருமாள் நாடாருக்கு ரீ சர்வே எண் 1116/13 ல் உள்ள 21 ¼ சொத்தில் 10 சென்ட்டை பிரதிவாதிகளுக்கு கொடுத்தோம் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு 2 மனைவிகள் உண்டு அதன்படி வாரிசுகளும்

உண்டு. எனது தாயார் ரீ சர்வே எண் 1116/13 ல் எனக்கு 7 ¼ சென்ட்டும் எனது தம்பிக்கு 4 சென்ட்டும் செட்டில்மெண்ட்டாக எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். மொத்தம் 21 ¼ சென்ட்டில் 11 ¼ சென்ட் எனக்கும் எனது தம்பிக்கும் எழுதி கொடுத்தது போக மீதமுள்ள 10 சென்ட் சொத்து பிரதிவாதிக்கு உரிமைப்பட்டது அதில் எனக்கு அவகாசம் கிடையாது என்றால் சரியல்ல. மொத்தம் 21 ¼ சென்ட்டில் 11 ¼ சென்ட் எனக்கும் எனது தம்பிக்கும் எழுதி கொடுத்தது போக மீதமுள்ள 10 சென்ட் சொத்தில் தான் பிரதிவாதிக்கு உரிமைப்பட்ட வீடும் கோவிலும் பிரதிவாதிகளின் கைவசம் உள்ளது என்றால் சரியல்ல.

மேற்படி கோவிலில் எவ்விதமான சாமி சிலைகளும் இல்லை என்றால் சரிதான். 6 விளக்குகள் மட்டும் உள்ளது. மேற்படி 6 விளக்குகள் இருப்பதாக வழக்குரையிலோ முதல் விசாரணையிலோ கூறியுள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக விளக்குகளுக்கு மட்டும் கும்பாவிஷேகம் செய்வது கிடையாது என்றால் சரியல்ல. கோபுரத்தில் கும்பம் உள்ளது. மேலும் விளக்கு மட்டும் வைத்து வழிபடும் கோவிலில் எவ்விதமான வரிகள் கிடையாது என்றால் சரிதான். பொதுவாக வீடுகளில் குத்துவிளக்கு இருக்கும் என்றால் சரிதான். அவ்வாறே பிரதிவாதிகள் அவர்களின் வீடுகளிலும் மேற்படி கோவிலிலும் விளக்கு வைத்து வழிபட்டு வந்தார்கள் என்றால் சரியல்ல.

பிரதிவாதிகளின் வீடு வடக்கு பக்கமும் மேற்படி கோவில் தெற்மேற்கு மூலை கன்னி பகுதியில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் ஊரில் வாழைக்காய் சாமியார் என்ற பெயரில் ஒரு கோவில் உள்ளது. அது எங்கள் ஊர் கோவில் என்றால் சரிதான். மேற்படி கோவிலும் எனது தாத்தாவின் சொத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஊர் கோவிலில்

நான் பொறுப்பில் உள்ளேன் என்றால் சரிதான். என்ன பொறுப்பில் உள்ளேன் என்றால் தலைவர் பொறுப்பில் உள்ளேன்.

மேற்படி ஊர் கோவிலில் மொத்தம் எத்தனை உறுப்பினர்கள் உள்ளார்கள் என்றால் உத்தேசமாக 60 உறுப்பினர்கள். மேற்படி 60 உறுப்பினர்களும் எனது குடும்பத்தார்கள் மற்றும் சொந்த பந்தங்கள் என்றால் சரிதான். பல ஊர்களை சார்ந்தவர்கள். மேற்படி ஊர் கோவில் ரீ சர்வே எண் 1116/13 ல் இருந்து எத்தனை தொலைவில் இருக்கும் என்றால் சுமார் 600 அடி. மேற்படி ஊர் கோவில் ரீ சர்வே எண் 1116/10 ல் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்களில் தான் எங்கள் குடும்பச் சொத்து உள்ளது அதில் தான் குடும்ப கோவிலும் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி 6 விளக்குகள் இருக்கும் கட்டிடத்திற்கு ஒரு வாசல் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசலை சுற்றி காம்பவுண்ட் சுவர் உள்ளது என்றால் சரிதான்.

மேற்படி காம்பவுண்ட் சுவரை நான் இடித்ததாக கூறி 2 ம் பிரதிவாதி புகார் கொடுத்து ராஜாக்கமங்கலம் காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனது பெயரில் யார் புகார் கொடுத்தது என்றால் செந்தாமரை, ராமையா, தங்கசாமி, ஜீவாத்மா ஆகியோர்கள். காம்பவுண்ட் சுவரை நான் இடித்ததாக புகார் கொடுத்த மேற்படி ஜீவாத்மா எனது உடன்பிறந்த சகோதரர் இராமையா 2 ம் பிரதிவாதி எனது பெரியப்பா மகன் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் கொடுத்த புகாரின் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு முறையாக விசாரித்து குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். பணம் கொடுத்து தாக்கல் செய்தார்கள்.

மேற்படி குற்ற வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டி மாண்புமிகு உயர் நீதிமன்ற மதுரை கிளையில் நான் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவில்

உத்தரவில் குறிப்பிட்ட வழிமுறைகளை பின்பற்றி காம்பவுண்ட் சுவரை நாங்கள் திருப்பி கட்டிக்கொடுத்தோம் என்றால் சரிதான். எங்கள் குடும்ப கோவில் என்று கூறியதால் கட்டிக் கொடுத்தோம். மேற்படி மாண்புமிகு உயர் நீதிமன்ற மதுரை கிளை மனுவின் உத்தரவில் குடும்ப கோவில் என்று கூறவில்லை என்றால் சரியல்ல.

காம்பவுண்ட் சுவரை கட்டினால் எங்கள் மீதான குற்ற வழக்கை தள்ளுபடி செய்வதாக மாண்புமிகு உயர் நீதிமன்றம் கூறியதன் பெயரில் காம்பவுண்ட் சுவர் கட்டி விட்டு மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் அபிடாவிட் தாக்கல் செய்ததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவு தொடர்பான எவ்வித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வெள்ளி மற்றும் சனி கிழமைகளில் பூ வைத்து விளக்கு போடுவதாக குறிப்பிட்டுள்ளேன். ஆனால் பிரதிவாதிகள் வெள்ளி மற்றும் ஞாயிற்று கிழமைகளில் தான் மேற்படி கூறியவாறு பூ வைத்து விளக்கு போடப்படும் என்று கூறுகிறார்கள் என்றால் சரியல்ல.

வழக்கு பட்டிகை சொத்தில் இருக்கக்கூடிய கோவிலில் உண்டியல் கிடையாது என்றால் சரிதான். மேற்படி கோவிலில் வரி இருக்கிறதா என்றால் இருக்கிறது. மேற்படி வரிக்கான ரசீதுகள் உண்டா என்றால் இல்லை. மேற்படி கோவில் பிரதிவாதிகளுடையது என்பதால் அவர்கள் வரி வாங்கும் முறை கிடையாது. மேலும் அதற்கான சட்ட விதிமுறைகளும் கிடையாது என்றால் சரிதான். காம்பவுண்ட் சுவரின் சாவியை R.D.O விடம் உள்ளது என்றால் சரியல்ல. காம்பவுண்ட் சுவரால் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக சாவியை R.D.O வாங்கி வைத்துள்ளார் ஏதேனும் விஷேஷ நாட்களில் அவரிடமிருந்து வாங்கி விட்டு அவரிடம் ஒப்படைத்து விடுவார்கள் என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதிக்கு ஒரு ஆண் மகன் இருந்து இறந்து விட்டார் வேறு வாரிசுகள்

கிடையாது என்றால் சரிதான். 2ம் பிரதிவாதிக்கு 3 பெண் குழந்தைகளும் 1 ஆண் குழந்தையும் உள்ளது என்றால் சரிதான். அவர்கள் வழக்கு பட்டிகை சொத்தில் தாமசம் இல்லை என்றால் சரிதான். மேற்படி 2ம் பிரதிவாதியின் 3 பெண் குழந்தைகளும் 1 ஆண் குழந்தையும் வழக்கு பட்டிகை சொத்தில் தாமசம் இல்லாததால் அந்த சொத்தினை அபகரிக்க வேண்டி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு 2 மூத்த சகோதரர்கள் உண்டு என்றால் சரிதான். மூத்த பெரியப்பா ஸ்ரீ கிருஷ்ண பெருமாள் நாடாரின் 2 குழந்தைகள் மீது தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது 2வது பெரியப்பா செல்லையா நாடார் இறந்த பின்பு அவரின் வாரிசுகளை இவ்வழக்கில் வாதியாகவோ பிரதிவாதியாகவோ கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. தேவையில்லை. இவ்வழக்கில் எனது உடன்பிறந்த சகோதரரான ஜீவாத்மாவை இவ்வழக்கில் வாதியாகவோ பிரதிவாதியாகவோ கட்சி சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள கோவிலை ஸ்ரீ கிருஷ்ண பெருமாள் தான் நிர்வாகம் செய்து வந்தார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வாதி மற்றும் பிரதிவாதிகளுக்காக நிர்வாகம் செய்து வந்தார். வழக்கு பட்டிகை சொத்தில் ஓட்டு கூரையை அகற்றி கான்கீரிட் கூரை அமைத்து புதுப்பிப்பதற்கு குடும்ப உறுப்பினர்கள் பணமும் பொருள் உதவியும் கட்டுமானத்திற்கு தேவையான பொருட்களும் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன். அதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள பிராமாண வாக்குமூலத்தில் பிரதிவாதிகளின் பெயரில் பட்டா உள்ளதால் கோவில் அவர்களுடையது என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால்

சரிதான். வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள வீடு மற்றும் கோவில் பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்டது அதனை நான் அபகரிக்க முயற்சிக்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கோவிலை நிர்வாகம் செய்யததாக கூறக்கூடிய ஸ்ரீகிருஷ்ண பெருமாள் நாடாரும் பிரதிவாதிகளின் பட்டாவின் இருக்கக்கூடிய ஸ்ரீகிருஷ்ண பெருமாள் நாடாரும் ஒரே நபர் என்றால் சரிதான். தற்போது வரையிலும் மேற்படி கோவிலில் பிரதிவாதிகள் தான் பூஜை செய்து வருகிறார்கள் அவர்களுக்கு தான் மேற்படி கோவிலில் உரிமை உண்டு எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்ட 10 சென்ட் இருக்கும் வீடு மட்டும் பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்டது என்றால் சரியல்ல. எனது ஊர் மக்களுக்கும் குடும்ப மக்களுக்கும் வேறு ஒரு கோவில் உள்ளது. அதில் நான் தான் தலைவராக செயல்படுகிறேன். ஆகையால் மேற்படி வழக்கு பட்டிகை சொத்தில் உள்ள கோவில் பிரதிவாதிகளுக்கு உரிமைப்பட்டது எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**